**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051814

1. District : **கடலூர்** மாவட்டம் | PS: **ஊ.த.க. பிரிவு** காவல்நிலையம் | Year: **2020** ஆண்டு | FIR No. **13/2020** மு.த.அ. எண் | Date: **04.12.2020** நாள்

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption** — Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: **(Amendment) Act 2018** — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: **Criminal Procedure Code** — Sections பிரிவுகள்: **102**
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் **03.12.2020** **16.15 hrs** — Date to நாள் வரை **03.12.2020** **20.15 hrs**
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **04.12.2020** — Time நேரம் : **1400 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - IV** — Time நேரம் : **1400 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **சுமார் 40 கி.மீ. தென்மேற்கு**
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி **சார் பதிவாளர் அலுவலகம், வடலூர்.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : -- மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **A. அமுதா** — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் -
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **உதவி ஆய்வுக்குழு அலுவலர்,** — (g) Address : முகவரி **கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**P.ரங்கராஜ், வயது 50, த/பெ.புருஷோத்தமன், சார்பதிவாளர், வடலூர், கடலூர் மாவட்டம்**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதமில்லை.**

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 04.12.2020 ந்தேதி மதியம் 14.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : 04.12.2020 அனுப்புநர் அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – சார் பதிவாளர் அலுவலகம், வடலூர், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் –

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

4/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 04/12/2020.
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.12.2020 at 15.30 hrs.

Name: பெயர் ....S. MALA.
Rank: நிலை .....................No. எண் .........
Inspector of police
VBAC, CUD.

சம்மந்தமாக, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய 03.12.2020 ஆம் தேதி எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், வடலூர் சார்பதிவக அலுவலகத்தில் வடலூரில் உள்ள ஆவண எழுத்தர்கள் 03.12.2020 ஆம் தேதி வடலூர் சார்பதிவகத்தில் சார்பதிவாளர் திரு.P.ரங்கராஜ் என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 02.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் S.மாலா அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி வடலூர் சார்பதிவகம் அலுவலகத்திற்கு மாலை சுமார் 04.30 மணிக்கு சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் வடலூர் சார்பதிவகத்தில் சார் பதிவாளரிடம், பத்திர பதிவிற்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் மாலா மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை 3.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு வடலூர் சேராக்குப்பம், துரைநகரில் வடக்கு தெற்காக உள்ள சாலையில் மேற்கு பார்த்து அமைந்துள்ள வடலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் வடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 04.15 மணிக்கு மேற்கு பார்த்து அமைந்து இருக்கும் வடலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது அங்கிருந்த பொதுமக்கள் பதற்றத்துடன் சார்பதிவாளர் அலுவலகத்தைவிட்டு வெளியேற முயன்றவர்களை தடுத்து நிருத்தி விசாரித்தபோது, அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார்கள். பின்னர், ஆய்வாளர் வடலூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பயந்து ஓடி வெளியே வந்தவர்களை, அலுவலகத்தின் மெயின் ஹாலில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம், அவர்தான் சார்பதிவாளர் என தெரிந்துகொண்டபின்னர், என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் P.ரங்கராஜ், வயது 50, த/பெ புருஷோத்தமன், சார்பதிவாளர், வடலூர் என்றும் கதவு எண்.721/9, சங்கர் நகர், கூத்தப்பக்கம், கடலூர் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, சார்பதிவாளர் திரு.ரங்கராஜ் அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்ய போகும் விவரத்தை

தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேற்படி வடலூர் சார்பதிவாளர் அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி மேற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் போர்டிகோ சுமார் 10 x 10 அடி நீள அகலமுள்ளது. அதனை தொடர்ந்து பிரதான வாயிற்படியும், அதனை அடுத்து சுமார் 20 x 18 அடி நீள அகலமுள்ள பிரதான அறை அமைக்கப்பட்டுள்ளது. அந்த அறையின் தென்புறம் மரத்தாலான மேஜை அமைக்கப்பட்டு அதன் மீது சார் பதிவாளர் இருக்கை வடக்கு பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது. அந்த இருக்கைக்கு வடபுறம் சிறிது உயரம் குறைவாக மற்றொரு டேபிளில் ஒரு கனிணி மற்றும் பிரிண்டர் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஹாலிற்கு வடக்கில் சுமார் 12 x 10 அடி நீல அகலம் கொண்ட கழிவறையுடன் கூடிய அறை உள்ளது. அந்த அறைக்கு கிழக்கு பக்கத்தில் சுமார் 12 x 16 அடி நீள அகலம் கொண்ட பதிவறை–II அமைக்கப்பட்டுள்ளது. அதில் சிமெண்ட் ரேக் மற்றும் மரத்தாலான அடுக்கும் அமைக்கப்பட்டு அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அந்த அறைக்குள்ளே கிழக்கில் சுமார் 12 x 16 நீள அகலம் கொண்ட பதிவறை–1 ம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் சிமெண்ட் ரேக் மற்றும் 6 இரும்பு பீரோக்கள், ஒரு மர பீரோ மற்றும் ஒரு மர பென்ச் அமைக்கப்பட்டு அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. சார் பதிவாளர் இருக்கைக்கு பின்புறம் சுமார் 11 x 16 அடி நீள அகலம் கொண்ட கண்ணாடி கதவுகள் அமைக்கப்பட்ட சர்வர் ரூம் உள்ளது. அதில் சர்வர் மற்றும் 6 கணினிகள், இரண்டு பிரிண்டர்கள் மற்றும் ஒரு Air condition அமைக்கப்பட்டுள்ளது. சார் பதிவாளர் அறைக்கு கிழக்கே சுமார் 16 x 16 நீள அகலம் கொண்ட ஒரு அறையும் அதில் இரண்டு கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அறையில் 7 இரும்பு பீரோக்கள் வைக்கப்பட்டுள்ளது. அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டுள்ளது. பின்னர் நான், ஆய்வாளர் மாலா, மற்றும் காவல் குழுவினருடன் சார்பதிவாளர் ரங்கராஜ் அவர்கள் முன்னிலையில் 1) சார்பதிவாளர் அலுவலகத்தில் நுழைந்தவுடன் இடதுபுறமாக இருந்த அறையை சோதனை செய்ய அதில் ஒரு மேஜை மற்றும் நாற்காலி அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் பதிவறை–IIல் சோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அந்த அறையுடன் இணைந்தாற்போல் உள்ள பதிவறை–I ஐ சோதனை செய்ததில் அந்த அறையில் இருந்த ஒரு மர பீரோவில் இரண்டாவது அடுக்கில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க 500 x 12 = 6000/-, 200 x 3 = 600/-, 50 x 6 = 300 ஆக மொத்தம் ரூ.6,900/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் ரங்கராஜனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 2) அதே அறையில் இருந்த மர பென்ஞ்யில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு அடியில் ஒரு கைக்குட்டையில் பணம் சுருட்டி

வைக்கப்பட்டிருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க 500 x 20 = 10000/- பணம் இருந்தது. மேற்படி பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் ரங்கராஜனிடம் விவரம் கேட்க, இந்த பணம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 3) சார்பதிவாளர் அறைக்கு கிழக்கே உள்ள அறையில் இருந்த இருப்பு பீரோக்களை சோதனை செய்யப்பட்டது. அதில் ஒரு இரும்பு பிரோவில் நான்காவது அடுக்கில் ஆவணங்களுக்கு அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க 2000 x 8 = 16,000/-, 500 x 22 = 11,000/- 100 x 1 = 100 ஆக மொத்தம் ரூ.27,100/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் ரங்கராஜனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 4) அதே அறையில் இருந்த மற்றொரு இரும்பு பீரோவின் அடி தட்டில் ஆவணங்களுக்கு அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க 500 x 17 = 8,500/-, 200 x 1 = 200/-, 100 x 13 = 1,300/- ஆக மொத்தம் ரூ.10,000/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் ரங்கராஜனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். பின்னர் சார்பதிவாளர் இருக்கைக்கு முன்புறம் அமைந்துள்ள மேஜை மற்றும் மேஜை அருகில் மர பெஞ்ஞ் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனை செய்யப்பட்டது. பின்னர் சார்பதிவாளரின் இருக்கை மற்றும் மேஜை போடப்பட்டிருந்த மரத்திலான மேடைக்கு கீழே சோதனை செய்த போது காக்கி நிற கவர் கிடந்தது. அந்த கவரை எடுத்து பார்த்த போது அதில் பணம் இருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க 500 x 20 = ரூ.10,000/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் ரங்கராஜனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும், மேற்சொன்ன சோதனையில் கைப்பற்றப்பட்ட அனைத்து பணத்திற்கும் சரியான முகாந்திரம், சார்பதிவாளர் ரங்கராஜன் தெரிவிக்காததால் மேற்படி பணம் மொத்தம் ரூ.64,000/– பத்திரபதிவு அலுவலகத்தில் பதிவு நடவடிக்கைக்காக லஞ்சமாக பெறப்பட்டிருக்கலாம் என கருதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றினேன். சோதனையின் போது சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியில் இருந்த பிரபாகர், வயது 24/2020, த/பெ விக்ரமன், 82, முழுக்குதுறை கிராமம், கிள்ளை அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவரை விசாரிக்க இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் சபுரா பேகம், வயது 46/2020, க/பெ ஜாகீர் உசேன், 46/1, 6–வது தெரு, போலிஸ் லைன், பண்ருட்டி என்பவரை விசாரிக்க உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் சேகர், வயது 50/2020, த/பெ கலியன், கோ.மங்களம், மனவாளநல்லூர் அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவரை விசாரிக்க அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் ஜெய்ஹிந்த், வயது 25/2020, த/பெ கார்த்திகேயன்,

519,காளியம்மன் கோவில் தெரு, சான்றோர்பாளையம், கடலூர் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவரை விசாரிக்க Data entry operator ஆக Out sourcing அடிப்படையில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் கேமரா ஆப்பரேட்டராக பணியாற்றி வரும் குணசேகரி வயது 30/2020 க/பெ ரஞ்சித்குமார், 76,மேற்கு தெரு, புதுபிள்ளையார் குப்பம், மாளிகம்பட்டு அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா என்பவரை விசாரிக்க தான் Out sourcing அடிப்படையில் Zigma Techonolgy Private Ltd கீழ் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேற்சொன்ன ஆய்வின்போது கணக்கில் வராத, சார்பதிவாளரால் உரிய காரணம் தெரிவிக்காத பணம் ரூ.64,000/– மட்டும் கைப்பற்றப்பட்டது. மேலும், 1) வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 31 வரை), 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 100 வரை), 3) கட்டிட களப்பணி பதிவேடு (01.04.2015 முதல் 28.11.2020 வரை பதிவுகள் உள்ளது), 4) புலத்தணிக்கை வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல் 92 வரை), 5) 03.02.2020 பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் விவரம் உள்ள Print out, ஆகியவற்றை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 04.15 மணி முதல் இரவு 08.15 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இன்று 04.12.2020ந் தேதி மதியம் 02.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, 03.12.2020ந்தேதி வடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.64,000/–, திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்.......) (அ. அமுதா) உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். அய்யா, நான் இன்று 04.12.2020ந் தேதி மதியம் 14.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2020, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 மற்றும் 102 குற்றவியல் நடைமுறை சட்டம் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S. Malar
4/12/2020.
Inspector of Police.
V&AC., CUD.,